மதுரை மாவட்டம் கிழக்கு தொகுதிக்குட்பட்ட திருமோகூர்ஒத்தக்கடை சாலையில் உள்ள தனியார் மகாலில் நடைபெற்ற, கலைஞரின் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் கீழ் விண்ணப்பங்கள் பெறும் சிறப்பு முகாமில் மகளிரிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களை பதிவேற்றும் பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பார்வையிட்டு ஆய்வு செய்த போது எடுத்தபடம். உடன் மாவட்ட கண்காணிப்பு அலுவலர், அரசு முதன்மைச் செயலாளர் (பொதுப்பணித்துறை) சந்திரமோகன், மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ. வெங்கடேசன், மாவட்ட ஊராட்சி தலைவர் சூரியகலா கலாநிதி, கூட்டுறவு வங்கி தலைவர் அ.பா.ரகுபதி, ஊராட்சி மன்ற தலைவர் முருகேஸ்வரி சரவணன்,மாவட்ட அறங்காவல் குழு தலைவர் ரவிச்சந்திரன், மாவட்ட கவுன்சிலர் வடிவேல்முருகன் உட்பட பலர் உள்ளனர்.

இராமநாதபுரம் - பரமக்குடியில் மாணவ - மாணவிகளுக்கு

விலையில்லா மிதிவண்டிகள் : அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் வழங்கினார்!

காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. - செ.முருகேசன் எம்.எல்.ஏ., பங்கேற்பு!

பரமக்குடி, ஜூலை 29 -

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி கீழ முஸ்லிம் மேல்நிலைப்பள்ளியில் நேற்று (28.07.2023) பள்ளி கல்வித்துறையின் மூலம் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் மாவட்டக் கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ. மற்றும் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன், மாவட்ட ஆட்சித்தலைவர் பா. விஷ்ணு சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தார்.

இதில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எப்.ராஜ கண்ணப்பன் தலைமையேற்று மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கினார்.

இதில் அவர் பேசியதாவது:

ஒவ்வொருவரின் வாழ்க்கைக்கு கல்வி மிக முக்கியமான ஒன்றாகும். ஒரு மனிதனுக்கு கல்வி ஒன்றே நிலையான சொத்தாகும். ஒருவர் முழுமையான கல்வி பெறுவதன் மூலம் அவர்களுடைய பொருளாதாரம் தானாக வளர்ச்சி பெரும், அந்த அளவிற்கு கல்வி மிக முக்கியமான ஒன்றாகும். இக்கல்வியை வசதி படைத்தவர்களுக்கு இனையாக வறுமையில் உள்ளவர்களும் முழுமையாக கல்வியைப் பெற்று பயன்பெற வேண்டும் என்ற நோக்குடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் பள்ளிக்கல்வித்துறைக்கு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி உள்ளார்கள். அதே வழியில் ஆட்சி நடத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பள்ளிக்கல்வித்துறைக்கு மற்ற துறைகளை விட கூடுதலாக நிதி ஒதுக்கீடு வழங்கி அனைவரும் உயர்கல்வி பெற வேண்டும் என்ற நோக்குடன் செயல்பட்டு இன்று பள்ளிக்கல்வித்துறையில் தமிழகம் சிறந்த மாநிலமாக திகழ்ந்து வருகிறது என்றால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திட்டங்களே ஆகும்.

இன்று நகர் பகுதி முதல் கிராம பகுதிகள் வரை அனைத்து அரசு பள்ளிகளிலும் மாணவ, மாணவிகள் நன்றாக படித்து உயர்கல்வி வரை செல்வது நமக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கின்றது. அதற்கேற்ப மாணவ, மாணவிகள் ஆசிரியர்கள் வழிகாட்டுதலை பின்பற்றி நன்றாக படித்து வெற்றி பெற வேண்டும். முன்பெல்லாம் பெண்கள் உயர் கல்வி வரை செல்வது எண்ணிக்கையில் குறைவாக இருந்தது. அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அரசு பள்ளியில் படித்து கல்லூரிகளுக்கு செல்லும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 ஆயிரம் வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி உள்ளார்கள். பொதுவாக ஒரு பழமொழி ஒன்று உண்டு. ஆண்கள் படித்தால் அதன் பயன் அவருக்கு மட்டுமே சேரும். ஆனால் பென்கள் படித்தால் அந்த குடும்பமே பயன்பெறும் என்பது பழமொழி, அதை உறுதிப்படுத்தும் வண்ணம் பெண்கள் உயர் கல்வி வரை படிக்க அரசு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வருகின்றன. தற்பொழுது கூட, 7.5 % சதவீதம் இட ஒதுக்கீடு மருத்துவப்படிப்பிற்கு மட்டுமின்றி பொறியியல் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள், போன்றவற்றில் படித்து பயன்பெறும் வகையில் இத்திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

அன்று காமராஜர் அவர்கள் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கினார். அடுத்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சத்துணவில் அனைத்து பள்ளி நாட்களுக்கும் முட்டை வழங்கி சத்தான உணவுகளை பள்ளி பிள்ளைகளுக்கு வழங்கினார். தற்பொழுது இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு திட்டத்தை வழங்கி முதன்மை முதல்வராக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இருந்து வருகிறார். இப்படி கல்வியில் அனைவரும் எவ்வித பாகுபாடுமின்றி உயர்கல்வியே பெற வேண்டும் என்பதே அரசின் நோக்கமாக இருந்து அரசின் திட்டங்களை வழங்கி வருகின்றன.

எப்படி மாணவ, மாணவிகளுக்கு இடையே வசதி படைத்தவர், வசதி இல்லாதவர்கள் என்ற நிலை தெரியாத வண்ணம் சீருடை அணிந்து எவ்வித பாகுபாடுமின்றி ஒரே மாதிரியாக வந்து கல்வி கற்று செல்கிறார்களோ, அதே போல் அனைவரும் உயர்கல்வி பெற்று சிறந்த சாதனையாளர்களாக உருவாகி பெற்றோர்களுக்கும், நம் பிறந்த ஊருக்கும் பெருமை தேடித் தர வேண்டுமென தெரிவித்தார்.

மேலும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பது போல் மக்களின் அத்தியாசிய தேவைக்கும் இந்த அரசு சிறப்பு கவனம் எடுத்து திட்டங்களை வழங்கி செயல்படுத்தி வருகின்றனர். அதிலும் குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குடிநீர் திட்ட பணிகளை வழங்கி இராமநாதபுரம் மாவட்டத்திற்கு காவிரி கூட்டு குடிநீர் திட்டம் மூலமாக தண்ணீர் வந்து கொண்டிருக்கின்றன. தற்பொழுது மக்கள் தொகை அதிகரித்ததன் அடிப்படையில் குடிநீர் தேவையை முழுமையாக நிறைவேற்றும் வண்ணம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு கூடுதலாக தனியாக ரூ.2400 கோடி மதிப்பீட்டில் கரூர் மாவட்டம், தஞ்சை புகலூர் காவிரி ஆற்று பகுதியில் இருந்து தண்ணீர் கொண்டு வந்து பொதுமக்களுக்கு வழங்க உத்தரவிட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

ஆக பொதுமக்களின் 75 ஆண்டு கால குடிநீர் பிரச்சினையை தீர்த்து வைத்து குடிநீருக்காக பெண்கள் குடங்களை எடுத்துக் கொண்டு வெளியில் செல்லாத நிலையே உருவாக்குவதே எனது முதல் பணி, அதை முழுமையாக நிறைவேற்றி மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வேன் .

இராமநாதபுரம் மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 2022 2023ஆம் கல்வியாண்டில் 11ம் வகுப்பு பயின்று வரும் 4446 மாணவர்களுக்கும், 5490 மாணவிகளுக்கும் என மொத்தம் 9936 மாணவு, மானவிகளுக்கு ரூ.4.79 கோடி மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்க ஒதுக்கீடு பெற்று இன்று 17 பள்ளிகளைச் சேர்ந்த 2358 மாணாவு, மானாவிகளுக்கு ரூ.1,13,91,240/ (ரூபாய் ஒரு கோடியே பதிமூன்று லட்சத்து தொன்னூற்று ஓராயிரத்து இருநூற்று நாற்பது) மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி மற்ற பள்ளிகளில் உள்ள மாணவ, மாணவிகளுக்கு உடனடியாக விலையில்லா மிதிவண்டி வழங்கப்படும். இவ்வாறு அமைச்சர் ஆர். எஸ். ராஜகண்ணப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ,முன்னாள் அமைச்சர் டாக்டர் எஸ் சுந்தர்ராஜன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே. முருகவேல், முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சுப. த. திவாகரன், முன்னாள் இளைஞரணி துணை செயலாளர் சுப.த.சம்பத்,மாவட்டத் துணைச் செயலாளர் கே கருப்பையா, ஒன்றிய செயலாளர் கமுதி வி. வாசுதேவன், மனோகரன், சண்முகநாதன், பரமக்குடி கிருஷ்ணமூர்த்தி, ஜெயக்குமார் , போகலூர் கே. கதிரவன், முதுகுளத்தூர் சண்முகம், ஆப்பனூர் ஆறுமுகவேல், சாயல்குடி ஜெயபால், சாயல்குடி குளாம், மாய கிருஷ்ணன், நைனார் கோவில் அண்ணாமலை, சக்தி, கமுதி பேரூராட்சி கழக செயலாளர் பாலமுருகன் போகலூர் ஒன்றிய துணைத் தலைவர் பூமிநாதன், பொதுக்குழு உறுப்பினர் எஸ். எம் .டி .அருளானந்த், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சத்தியேந்திரன், சன் சம்பத், பரமக்குடி நகர செயலாளர் ஜீவரத்தினம்,நகர் மன்ற உறுப்பினர்கள் அப்துல் மாலிக் சதீஷ்,தனலட்சுமி ராஜு,மாவட்டம் மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஷர்மிளா மற்றும் நகர துணை செயலாளர் மோகனா, கருப்பையா, பரமக்குடி சார் ஆட்சியர் அப்தாப் ரகூல்,, முதன்மை கல்வி அலுவலர் பாலுமுத்து , மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் உ.திசைவீரன் அவர்கள், மாவட்ட ஊராட்சி குழுத் துணைத்தலைவர் வி.வேலுச்சாமி , பரமக்குடி நகர் மன்றத்தலைவர் சேது கருணாநிதி , பரமக்குடி நகர்மன்ற துணைத்தலைவர் குணசேகரன் , பரமக்குடி 31 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் ஆர்.ஜெயபாரதி , மாவட்ட கல்வி அலுவலர் சுதாகர் , கீழ முஸ்லிம் பள்ளி தாளாளர் சாகுல் ஹமீது , கீழ முஸ்லிம் பள்ளி தலைமையாசிரியர் அஜ்மல்கான் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கொரோனா காலத்தில் தமிழக அரசு வழங்கிய நிதியைபொக்கை வாய் மூலம் சிரித்து பெற்று தமிழக முதலமைச்சரின் மனதில் இடம் பிடித்த கன்னியாகுமரி மாவட்டம் கீழக்கலுங்கடி பகுதியைச் சேர்ந்த 92 வயதான புன்னகை சிரிப்புக்கு சொந்தமான வேலம்மாள் பாட்டி காலமானார். அவரது மறைவுக்கு தமிழக முதலமைச்சர் இரங்கல் தெரிவித்தார். மேலும் வேலம்மாள்பாட்டி மறைந்த செய்தி அறிந்து குமரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் மேயருமான ரெ மகேஷ் அவரது இல்லத்திற்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். உடன் அகஸ்தீஸ்வரம் யூனியன் கவுன்சிலர் அருண்காந்த் மற்றும் பகுதி பொறுப்பாளர் ஷேக் உட்பட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி கீழ முஸ்லிம் மேல்நிலைப் பள்ளியில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் கலந்துகொண்டு மாணவ - மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., செ.முருகேசன் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் டாக்டர் எஸ்.சுந்தரராஜன், முன்னாள் எம்.எல்.ஏ., கே.முருகேசன், சுப.திவாகரன், சுப.த.சம்பத், கே.கருப்பையா, கமுதி வி.வாசுதேவன் உட்பட கழக நிர்வாகிகள், பள்ளி நிர்வாகிகள், மாணவ - மாணவியர் கலந்துகொண்டனர்.

சான்றாண்மைப் புலவர்

நாவலர் சோமசுந்தர பாரதியார் 145 ஆவது பிறந்த நாள்!

தமிழறிஞர் நாவலர் அவர்கள் 1879 ஆம் ஆண்டு சூலை 28 அன்று எட்டயபுரம் எட்டப்பபிள்ளை முத்தம்மாள் அவர்களுக்கு புதல்வராகப் பிறந்தார். பெற்றோர், அவருக்கு சோமசுந்தரம் என்று பெயர் சூட்டினர்.

ஆரியருக்கு அடிமை இல்லை என்ற எண்ணம் நாவலர் சோமசுந்தர பாரதியாரிடம், தான் சோமசுந்தரமாக இருந்தபோதே (1943) 40 ஆண்டுகளுக்கு முன்பாகவே இருந்தது என்பதற்குச் சான்று, அவரது திருமணம் 14 அகவையில் நடைபெற்றது. பிராமணனை வைத்து புரோகித முறைப்படி திருமணம் செய்யவேண்டும் என்பதை ஏற்காமல், சைவ ஓதுவார்களைக் கொண்டு திருமணம் செய்து கொண்டவர் நாவலர் ஆவார்.

ஒருமுறை எட்டயபுரம் அரண்மனைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு புலவர் குழு வருகை தந்து, அரசவைப் புலவர் அவையில், ஈற்றடி தந்து நடத்திய "பா" போட்டியில், இருவர்களின் பாக்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு "பாரதி" என்ற பட்டம் வழங்கப்பட்டது. அவர்கள் யார் யார் என்றால் ஒருவர் சுப்பிரமணிய பாரதியார், மற்றொருவர் நாவலர் சோமசுந்தர பாரதியாரே ஆவார்.

நாவலர் சிறந்த இலக்கியவியலாளர் மட்டுமல்ல உயர்ந்த பேச்சாளரும் ஆவார். விடுதலை வேட்கையில் நாட்டம் கொண்டவர் மட்டுமல்ல; தீண்டாமை ஒழிப்பு இயக்க மதுரை மாவட்டத் தலைவராக இருந்து, தீண்டாமையை ஒழிப்பதற்குத் தொண்டாற்றியவர்.

தசரதன் குறையும் கைகேயியின் நிறையும், சேரர் தாயமுறை, சேரர்பேரூர், அழகு தமிழும் தமிழரும், பழந் தமிழ்நாடு, நற்றமிழ், திருவள்ளுவர், இந்தி கட்டாயமா? போன்ற சிறந்த நூல்களைப் படைத்துள்ளார்கள்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களின் அழைப்பினை ஏற்று சுதேசிக் கப்பல்களின் நிர்வாகப் பொறுப்பினை நாவலர் சோமசுந்தர பாரதியார் ஏற்றார். தமிழறிஞர் வ.உ.சி அவர்கள், "என்னிடம் சுதேசி சரக்குக் கப்பல்கள் இரண்டு உள்ளன. மூன்றாவதாக தமிழ்க் கப்பல் உள்ளது" என்று நாவலர் பாரதியாரைப் பற்றி புகழ்ந்து உரைப்பார்.

தமிழர்க்கு தன்மான உணர்வு வளரவேண்டும் என்று உழைத்தவர் நாவலர் ஆவார். அது மட்டுமன்று, தன்மான இயக்கத்திற்கு பெரியார் ஒருவர்தான் தலைவர். காங்கிரஸ் இயக்கத்திற்கு எப்படி மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி தலைவராக இருக்கிறாரோ, அதே போன்று தன்மான இயக்கத்திற்குப் பெரியார் மட்டும்தான் தலைவராக முடியும் என்று கூறியவர் நாவலர் சோமசுந்தர பாரதியாரே ஆவார்.

யாழ்ப்பாணம் ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் மன்றம் 1944 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 30 ஆம் நாள் "நாவலர்" என்ற பட்டத்தினை வழங்கி பெருமை பெற்றது.

சென்னை இராஜதானி முதல்வராக இருந்த இராஜாஜி, 1937 ஆம் ஆண்டு தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இந்தியைத் திணித்தபோது, நாவலர் பாரதியார் அவர்கள், தந்தை பெரியாருடன் இணைந்து இந்தியை எதிர்த்துப் போர்க்களம் அமைத்து பெரும் கிளர்ச்சி செய்தவர்.

நாவலர் இந்தியை எதிர்த்துப் போராடிய காலத்தில், "கொதித்த குருதியும், துடித்த நெஞ்சமும், முறுக்கேறிய மீசையும் கொண்டு போராடியவர்" என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் புகழ்ந்து போற்றப்பட்டவர்.

எட்டையபுரத்தில் 1937ல் நடந்த இந்தி எதிர்ப்பு பரப்புரைக் கூட்டத்தில், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் உரையாற்றிக் கொண்டிருந்தபோது இந்திக்கு ஆலவட்டம், சுற்றியோர் கல்லெறிந்து கலகம் விளைவித்த அந்த எழுச்சிமிக்க கூட்டத்திற்கு தலைமை தாங்கியவர் மண்ணின் மைந்தர் நாவலரே ஆவார்.

1937 ஆம் ஆண்டு சென்னை மாகாணத் தேர்தலில் காங்கிரசு வெற்றி பெற்று இராஜாஜி முதல்வரானதும் சென்னை இராமகிருட்டிணா மடத்தில் நடந்த கூட்டத்தில், 'தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இந்திமொழி கட்டாய பாடமாக ஆக்கப்படும்' என்று அறிவித்தவுடன், தமிழ்நாட்டில் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. சென்னை சௌந்தர்யா திருமண மண்டபத்தில் இந்தி திணிப்பு எதிர்ப்புக் கூட்டம். தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலை அடிகள், அறிஞர் அண்ணா, கே.எம். பாலசுப்பிரமணியம் எழுச்சியுரை ஆற்றிய கூட்டத்திற்கு தலைமை தாங்கியவர் நாவலர் சோமசுந்தர பாரதியாரே ஆவார்.

தமிழ்நாடு முழுதும் எண்ணற்ற இந்தித் திணிப்பு எதிர்ப்புக் கூட்டங்கள் மாபெரும் பேரணிகள், நிகழ்ச்சிகளில் அறிஞர் பெருமக்களின் உணர்ச்சி ஊட்டும் உரைகள் தமிழ் மக்கள் மத்தியில் புதிய எழுச்சியை உருவாக்கின என்றாலும், நாவலர் பாரதியார் தமிழ்ப் பற்றில் யாருக்கும் சளைக்காதவர். மார்தட்டிப் பேசும் வீர இயல்பு கொண்டவர். ஊர் தோறும் தமிழ் முழக்கம் புரிந்தவர். இந்தி வேண்டாம் இந்தியே வேண்டாம் என்பதற்கு ஆயிரம் காரணங்களை எடுத்துக் காட்டியவர். இந்தி வேண்டும் என்பதற்கு ஒரு காரணம் சொல்ல முடியுமா ? என்று மக்கள் மன்றத்தில் எழுச்சியுரை ஆற்றியவர் நாவலர்பாரதியார்.

அண்ணாமலைபல்கலைக்கழகத்தில்தமிழ்த்துறைத் தலைவராக பணியாற்றியவர் நாவலர். கம்ப இராமாயணம் எரிக்கப்பட வேண்டுமா ? வேண்டாமா? என்று சேலத்தில் 14.03.1943ல் (நாகரிகமாக) நடைபெற்ற சொற்போரில் அறிஞர் அண்ணாவை எதிர்த்து சொற் போரிட்டவர் நாவலர் ஆவார்.

சென்னை பச்சையப்பன் கல்லூரி திடலில் பேரறிஞர் அண்ணா அவர்கள், பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுக்கு ரூ. 24,393 பொற்கிழி வழங்கி "புரட்சிக்கவிஞர்" என்ற பட்டத்தை வழங்கிய மாபெரும் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கியவர் நாவலர் சோமசுந்தர பாரதியாராகும். அதுவும் நாவலர் அவர்களின் 28.07.1946 (1879) பிறந்தநாளில் நடைபெற்றது பெரும் சிறப்பாகும்.

தமிழுக்கு தமிழினத்திற்கென்று "திருவள்ளுவர் தொடராண்டினை" நடைமுறைப் படுத்திட நூறாண்டுகளுக்குமுன் சென்னை பச்சையப்பன் கல்லூரி வளாகத்தில், தனித் தமிழ் இயக்கத் தந்தை மறைமலை அடிகள் தலைமையில் 530க்கு மேற்பட்ட தமிழறிஞர்கள் ஒன்றுகூடி முடிவெடுத்தபோது, "திருவள்ளுவர் வாழ்ந்த காலம்" கிறித்து பிறப்பிற்கு 31 ஆண்டுகளுக்கு முன்பு என்று ஆய்ந்து தெளிந்து, கி.மு. 31தான் என தக்க சான்றுகளுடன் தமிழ்ச் சான்றோர்கள் கூட்டத்தில் எடுத்துரைத்து, அறிஞர் பெரும் மக்களின் பாராட்டினைப் பெற்றவர்.

தமிழறிஞர் நாவலர் சோமசுந்தரபாரதியார் 1959 டிசம்பர் 14 ஆம் நாள் இயற்கை எய்தினார்கள்.

"பசுமலை பாரதி பாண்டியன் தோற்றம் -
நாவலரே என்று
நாடே அழைக்கும் "என்று
முத்தமிழறிஞர்
கலைஞர் அவர்கள் போற்றிய
நாவலரின்
புகழ் நீடு வாழ்க!

க.வை. இராமகிருட்டிணன்
செயலர்
அய்யன் திருவள்ளுவர்
இலக்கிய மன்றம், மதுரை

தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் தொகுதிவடக்கு ஒன்றியம் சில்வார்பட்டியில் வடக்கு ஒன்றிய செயலாளர் எல் .எம் பாண்டியன் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சரவணகுமார் எம்.எல்.ஏ. மாபெரும் கிரிக்கெட் போட்டியை தொடங்கி வைத்தார். உடன் ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் தங்கவேல், கெங்குவார்பட்டி பேரூர் செயலாளர் தமிழன், வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் முத்துப்பாண்டி, பெரியகுளம் நகர செயலாளர் முகமது இலியாஸ், வடக்கு மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பரமசிவம், இளைஞர் அணி தினேஷ், ரமேஷ், தெய்வம், மாயன், பழனி குமார் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.